DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.43/2021**

Prosecution **PW.4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மகேந்திரன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | அர்ஜுனன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கட்டளையில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முருகராஜ் எனது மச்சான் ஆவார். ஆஜர் 2ம் எதிரி ஹரிகிருஷ்ணனை தெரியாது. தேதி, மாதம், வருடம், எதுவும் தெரியாது. அ.சா.1 வழிப்பறி செய்ததாக கேள்விப்பட்டேன். மற்ற படி வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.2 முருகராஜ் கடந்த 17.10.2015ம் தேதி இரவு 08.00 மணியளவில் கரூர்–திருச்சி NH67 மெயின் ரோட்டில் வீரராக்கியம் சுவாதி திருமணமண்டபம் கீழ்புறம் உள்ள பஞ்சர் கடை யில் வந்து காற்று பரிசோதனை செய்த லாரியை இரவு 08.30 கடையில் நிறுத்திவிட்டு கடையை பார்த்தபோது பூட்டியிருந்ததால் வேறு கடையில் பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று லாரியில் ஏற முயன்ற போது சற்று தூரத்தில் மது அருந்திகொண்டிருந்த 1ம் எதிரி கார்த்திக் ஆஜர் 2ம் எதிரி ஹரிகிருஷ்ணன் எங்கடா வண்டியில் ஏர்ற தேவடியா பயலே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றால் எனக்குத் தெரியாது. 1ம் எதிரி

கார்த்திக் பஞ்சர் கடையில் கீழே கடந்த இரும்புக்கம்பியால் பட்டியல் சாட்சி 1 முருகராஜ் என்பவரை இடது முழுங்கை மற்றும் வலது தொடையில் கம்பியால் அடித்தார் என்று ஆஜர் 2ம் எதிரி ஹரிகிருஷ்ணன் பட்டியல் சாட்சி 1 முருகராஜ் சட்டை பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுக்க முயன்று முருகராஜ் தடுத்ததால் இரும்புக்கம்பியை வைத்திருந்தவர் பணத்தை கொடுக்கவில்லை என்றால் முருகராஜை கம்பியால் அடித்து கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றால் எனக்குத் தெரியாது. முருகராஜ் வலி தாங்கமுடியாமல் கத்தி அங்கிருந்தவர்கள் வரவே எதிரிகள் இருவரும் TN 48 A5590 pulsar இருசக்கர வாகனத்தை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி சங்கதிகளை போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை</u>**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.17 10:50:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.